**செய்தி வெளியீடு எண்:599** **நாள்:18.12.2016**

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா காட்டிய வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, வர்தா புயல் காரணமாக மக்களுக்கு எந்தவித தொற்று நோயும் ஏற்படாமல் தடுக்க போர்க்கால அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (18.12.2016) ஆய்வு செய்தார். இச்சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடர்ந்து வருகிற 5 நாட்களுக்கு 50 சிறப்பு மருத்துவக் குழுக்கள் மூலம் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் 100 மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. 150 மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் இம்முகாம்களில் கலந்து கொள்ள உள்ளனர்.

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு சென்ற ஆண்டு வெள்ள பாதிப்பினால் ஏற்படும் தொற்று நோய், காய்ச்சல் வராமல் தடுத்து தமிழ்நாடு முழுவதும் 80 இலட்சம் நபர்களுக்கு கொடுக்கப்பட்டு பொதுமக்களின் பேராதரவு பெற்ற நிலவேம்பு குடிநீர், சளி மற்றும் இதர சுவாச நோய்களுக்கான தாளிசாதிசூரணம், காலில் ஏற்படும் சேற்றுப்புண்ணிலிருந்து பாதுகாக்க வங்கவெண்ணெய் மற்றும் தொற்று நோய்கள் பரவாத வண்ணம் தடுப்பு மருந்துகள் இச்சிறப்பு முகாமில் வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திரு. மோகன்பியாரே, இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர் க. குழந்தைசாமி மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**